(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 155.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஜூன் 11, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

122/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை உரித்தாகவுள்ள உத்தியோகபூர்வ சிறப்புரிமைகள் யாவையென்பதையும்;

(ii) அச்சிறப்புரிமைகள் குறைக்கப்படுமா, இன்றேல், நீக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறைக்கப்படும் / நீக்கப்படும் சிறப்புரிமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் தொடர்பாக ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விதப்புரைகள் யாவையென்பதையும்;

(ii) அதனோடு தொடர்புடைய அறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனமொன்றை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு பாராளுமன்ற உணவகத்திலிருந்து உணவு, பானங்கள் வழங்குதல் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

209/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) போயர் (Boer) ரகத்தைச் சார்ந்த 250 ஆடுகளை இனவிருத்தி செய்து பகிர்ந்தளிப்பதற்காக வகுக்கப்பட்ட ஐந்தாண்டுக் கருத்திட்டம், மாத்தளை, இம்புல்தண்ட ஆடுகள் இனவிருத்தி நிலையத்தில் எத்திகதியில் ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படிக் கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் கீழ் வருடாந்தம் இனவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை மற்றும் உண்மையில் இனவிருத்தி செய்யப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை என்பன ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அக்கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டிய வருமானம் மற்றும் ஏற்பட்ட செலவுகள் என்பவற்றுக்கமைவாக ஒவ்வொரு ஆடுக்காகவும் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படிக் கருத்திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

231/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் தலைமை அதிபதியின் கீழ், சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்காக 'வளமான நாடு, அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இன்றளவில் சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகம் ஒவ்வொன்றுக்குமென இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களை நிறுவுவதற்காக இதுவரையில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

466/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 முதல் இற்றை வரை ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் இலாபம் யாவை என்பதை வெவ்வேறாகவும்;

(ii) இற்றை வரை அக்கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்குச் சதவீதம் மற்றும் மொத்த ஐந்தொகைப் பெறுமதி யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்துடன் போட்டியிடுபவர்களின் பெயர்கள் மற்றும் ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதியில் அவர்களுடைய சந்தைப் பங்கின் சதவீதம் மற்றும் மொத்தம் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஒவ்வொரு ஆண்டிலும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படும் நேரடி மற்றும் மறைமுக வரிகளின் தொகை யாவை என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அவற்றுக்குச் சொந்தமான பங்குகளின் தொகை ஆகியன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2020 முதல் இற்றை ஒவ்வொரு ஆண்டிலும் மேலே குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்தில் —

(i) பணியாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் சம்பளம் மற்றும் ஊதியங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை யாதென்பதையும்;

(ii) முதலீட்டு வருமானம் எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

598/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 சனாதிபதித் தேர்தலின் பின்னரான காலப்பகுதியில் இற்றைவரை சர்வதேச நாணய நிதியத்தை விடுத்து, அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடன் பெறப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி வீதம்;

(ii) கடனைப் பெற்றுக்கொண்டதற்கான காரணங்கள்;

(iii) கடன் தவணை செலுத்துதல் ஆரம்பமாகும் திகதி மற்றும் செலுத்தி முடிக்கவிருக்கும் திகதி;

ஆகிய விபரங்கள் கடனைப் பெற்றுக்கொண்ட நாடுகளின் வாரியாக வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

644/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களின் பெயர்கள் யாவை;

(ii) தற்போது மேற்படி டிப்போக்களில் மனிதவளப் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், மேற்படி டிப்போக்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

7.

655/2025

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய களஞ்சியசாலை ஒவ்வொன்றினதும் கொள்ளளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி களஞ்சியசாலைகளில் 2020 ஆம் ஆண்டின் பின்னர் நவீனமயப்படுத்தப்பட்ட களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நவீனமயப்படுத்தலுக்காக செலவிட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி களஞ்சியசாலைகளை நவீனமயப்படுத்தியதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(vii) அந்த நவீனமயப்படுத்தல் சம்பந்தமாக கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1106/2025

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இலங்கைக்கு கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் மொத்தப் பெறுமதி அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடைய முதலீட்டுக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய முதலீட்டு கருத்திட்டம் ஒவ்வொன்றினதும் தன்மை மற்றும் முதலீடு செய்துள்ள தொகை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) அத்தகைய முதலீட்டு கருத்திட்டம் ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்பட்ட திகதி/ ஆரம்பிக்கப்படும் திகதி, பூர்த்திசெய்யப்படும் திகதி மற்றும் ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலமும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1472/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாண ஆளுநருக்குக் கிடைக்கப்பெற்றதொரு முறைப்பாட்டிற்கமைய நுகேகொடை, புனித. ஜோன்ஸ் கல்லூரியின் அதிபருக்கெதிராக 2025.06.04 ஆம் திகதி தொடக்கம் 2025.07.04 ஆம் திகதி வரையில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) விசாரணையை மேற்கொண்ட குழுவினால் மேற்படி விசாரணையானது பக்கச்சார்பின்றி முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த அதிபர் தொடர்பாக மேற்படி விசாரணைக் குழு முன்வைத்த விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி விதப்புரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 1.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— தித்வா புயலை எதிர்கொள்வதற்காக முன்னாயத்தத்துடன் இருக்கவில்லை என்பது தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— தித்வா புயலை எதிர்கொள்வதற்காக முன்னாயத்தத்துடன் இருக்கவில்லை என்பது தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பிலான முன்மொழிவுகளையும் விதப்புரை களையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு, தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 2026 சனவரி 21 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால், குறிப்பிட்ட விசேட குழுவிற்கு வழங்கப்பட்ட கால எல்லை, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2026 செப்தெம்பர் 19 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யபடுமாக

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் மாலைதீவு குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையிலான 2025, யூலை மாதத்தில் கையொப்பமிடப்பட்ட பொருத்தனை தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் விதிகள்,— 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 106 மற்றும் 78(ஆ) ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆளும் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் ஆக்கப்பட்டு 2026 மார்ச் 12 ஆம் திகதிய 2479/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*12.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

15.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---